மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை
அசல் வழக்கு எண்.792/2019

**2022–ம் ஆண்டு நவம்பர் மாதம் 21–ம் நாள் திங்கள் கிழமை** வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய PW–1 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) **திரு. S. சரவணன், இளநிலை உதவியாளர்** என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :பச்சமுத்து | தொழில் | :விவசாயம் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | :பெரியசாமி | வட்டம் | : வேப்பந்தட்டை |
| கிராமம் | :பசும்பலூர் | சமயம் | : |
| சாதி | : | வயது | : 68/2022 |

**முதல் விசாரணை :**

1 (i) நான் மேற்படி வழக்கில் வாதியாவேன். நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை எழுத்து மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்யும் ஆவணங்களை வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். 05.08.1994–ம் தேதியிட்ட தாவா சொத்தை நான் கிரையம் பெற்றதற்கான கிரையப்பத்திரத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.– 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) தாவா சொத்திற்குரிய மனைவரி பட்டா சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.– 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.)

(ii) 26.12.2016–ம் தேதியிட்ட பிரதிவாதி சகோதரர் பழனிமுத்துவிடம் அவருக்கு மகனுக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.– 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 26.12.2016–ம் தேதியிட்ட பிரதிவாதியின் சகோதரர்கள் எனக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.– 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) பின்னிட்டு நான் 06.12.2018–ம் தேதியிட்டு பிரதிவாதி எனக்கு அனுப்பிய சட்ட அறிவிப்புக்கு என்னால் அனுப்பப்பட்ட பதில் அறிவிப்பின் அலுவலக நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.– 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) வாதி

தரப்பில் ஆவணங்கள் கூடுதலாக குறியீடு செய்வதற்காக ஒத்திவைக்கப்படுகிறது.